**புனித அந்தோணியார் ஆலயம், சத்தியமூர்த்தி நகர், சென்னை - 39**
**ஞாயிறு அறிவிப்புக்கள் - 21.5.2017**

01. இன்று பாஸ்கா காலத்தின் ஆறாம் ஞாயிறு. வருகிற ஞாயிற்றுக்கிழமை நம் ஆண்டவரின் விண்ணேற்றப் பெருவிழாவினை கொண்டாடுகின்றோம். இன்றைய திருப்பலி முடிந்தவுடன் இளையோர் கூட்டமும், மறைக்கல்வி வகுப்புகளும் வழக்கம்போல் நடைபெறும்.

02. அனுதினமும் மாலை நேரத்தில் நடைபெறும் தேவதாயின் வணக்க மாதம் திருநிகழ்வுகளில் அனைவரும் கலந்துகொள்ள அன்போடு அழைக்கின்றோம்.

03. மே மாதம் 24-ம் நாள், வருகிற புதன்கிழமையன்று, கிறிஸ்தவர்களின் சகாயத் தாயின் பெருவிழாவினை கொண்டாடவுள்ளோம். அன்று மாலை 6.00 மணிக்கு செபமாலை, அன்னையின் தேர்ப்பவனி, அதனைத் தொடர்ந்து திருப்பலி, விண்ணப்பங்கள் எரித்தல் ஆகியவை நடைபெறும். அந்நாளினை நம் பங்கின் மரியாயின்சே சேனையினர் சிறப்பிப்பர்.

04. கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற கோடை முகாம் மற்றும் விவிலிய முகாம் JAM 2017 இன்றுடன் நிறைவு பெறுகிறது. இம்முகாமினை வழிநடத்திய ஒருங்கிணைப்பாளர்கள் ஆனந்த், விவேக், அஜய் ஆகியோருக்கும், அனைத்து ஆசிரியர்கள், Volunteers, sponsors அனைவருக்கும் பங்கின் சார்பாக சிறப்பான நன்றியினையும், பாராட்டுக்களையும், செபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

05. வருகிற ஞாயிற்றுக்கிழமை, மே மாதம் 28-ம் நாள் நம் பங்கைச் சார்ந்த திருமதி ஜெரால்டு மேரி அவர்களின் மகள் அருட்சகோதரி எப்சீபா அவர்களின் அர்ப்பண வாழ்வின் நித்திய வார்த்தைப்பாட்டு விழாவினை மாலை 6 மணியளவில் நம் பங்கிலே கொண்டாடவுள்ளோம். மாலைத் திருப்பலிக்குப் பின் வீட்டார் சார்பாக அனைவருக்கும் விருந்து அளிக்கப்படும். இது நம் பங்கின் குடும்ப விழா என்பதனை மனதில் கொண்டு அனைவரும் அதில் பங்குபெற அன்போடு அழைக்கின்றோம். இதனை முன்னிட்டு அன்று காலை 6 மணித் திருப்பலி மட்டும் நடைபெறும். ஆனால் காலை 7.30 மணித் திருப்பலி நடைபெறாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**06. திருமண அறிவிப்புகள்:**

1. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, மாத்தூரில் வசிக்கும் பெற்றோர் ராஜா – சந்திரா அவர்களின் மகன் சத்திய ராஜ்க்கும், நமது உயர் மறைமாவட்டம், நமது பங்கு, J.J.R. நகரில் வசிக்கும் பெற்றோர் ஜோசப் - திரேசா மேரி அவர்களின் மகள் நவீனாவக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது மூன்றாவது ஓலை.
2. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் ஜோசப் பிரான்சிஸ் - வியாகுல மேரி அவர்களின் மகன் தாமஸ் ஆலனுக்கும், நமது உயர் மறைமாவட்டம், புனித சூசையப்பர் பங்கு, திருவள்ளுவர் நகரில் வசிக்கும் பெற்றோர் செல்வராஜ் - சகாயமேரி அவர்களின் மகள் டெனிஸ் இன்பென்டினாவுக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.
3. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் அகஸ்டீன் - லூர்து மேரி அவர்களின் மகன் விஜய் அற்புதராஜ் ரெனால்டுக்கும், நமது உயர் மறைமாவட்டம், புனித சகாய அன்னை பங்கு, நம்மாழ்வார்பேட்டையில் வசிக்கும் பெற்றோர் பிரான்கிளின் - பாத்திமா அவர்களின் மகள் ஆக்னல் சான்ட்ராவுக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.
4. செங்கல்பட்டு மறைமாவட்டம், புனித சுவக்கீன்,அன்னாள் பங்கு, வேட்டுவாங்கன்னியில் வசிக்கும் பெற்றோர் குமார் - தங்கமணி அவர்களின் மகன் நரேஷ் குமாருக்கும், நமது உயர் மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் காணிக்கை ராஜ் - பாலம்மாள் அவர்களின் மகள் ஆரோக்கிய மேரிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது இரண்டாவது ஓலை.
5. நமது உயர்மறைமாவட்டம், நமது பங்கு, MKB நகரில் வசிக்கும் பெற்றோர் சுரேந்திரன் - வசந்தா அவர்களின் மகன் சாந்தா ராமுக்கும், செங்கல்பட்டு மறைமாவட்டம், புனித குழந்தை

இயேசு பங்கு, செம்மஞ்சேரியில் வசிக்கும் பெற்றோர் ஜான் - பிரபாவதி அவர்களின் மகள் ஜான்சி ராணிக்கும் திருமணம் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. இது முதல் ஓலை.

இம்மணமக்களுக்காக செபிப்பதும், இத்திருமணங்களில் ஏதேனும் விக்கினமிருந்தால் பங்குத் தந்தைக்கு தெரிவிப்பதும் நம் அனைவரின் கடமையாகும்.